269

அஞ்சா நெஞ்சன்

அழகிரிசாமி

GISTRAR OF BOOKS

காஞ்சி-கலியாண சுந்தரன்.

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி

காஞ்சி - கல்யாணசுந்தரன்

அறிவுப் பண்ணை

சென்னை 1.

R34 ω M98
N47

Printed at the Model Press,
Godown Street, G. T., Madras.

முன்னுரை

தோழர் அழகிரிசாமியின் வாழ்க்கையில் நிகழ்ந்தவை பல. நான் கண்டு—கேட்ட சிலவற்றைக் குறித்துள்ளேன். எனவே முழு நூல் அல்ல இது. பெரு நூல் கொணரவும் முயற்சிக்கிறேன். குறைபாடு இருக்கும். பொறுத்திடுக.

ஆசிரியன்

உரிமை

பிள்ளைப் பருவத்திலிருந்து தோழர் அழகிரி சாமிக்கு உற்ற துணையாக இருந்து, நட்பின் தன்மையை இறுதிவரை செயலளவில் காட்டி வந்த போராவூராணித் தோழர் குழந்தைக்கு, இதனை உரிமை யாக்குகிறேன்.

ஆசிரியன்

பட்டுக்கோட்டை

K. V. அழகிரிசாமி

1898 — 1949

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி

"பிணியாளரின் உயிருக்கொன்றும் ஆபத்து வந்துவிடாதே? பிழைத்துக் கொள்ளுவாரன்றோ?

"ஏதோ! என்னால் ஆன சிகிச்சை எல்லாம் செய்கிறேன். பின்னர் கடவுள் விட்ட வழியாகிறது!"

"என்ன டாக்டர்! தங்கள் ஆற்றலையும் அறிவையும் நம்பி உங்களிடம் நோயாளியை ஒப்படைத்தோம்; நீங்கள் நோயைக் குணப்படுத்துவதற்குக் கடவுளைத் துணைக்கழைக்கிறீர்?"

"நம்மால் என்ன சார் ஆகும்? முயற்சிக்கத் தானே முடியும்? முடிவு நமது கையிலா, சார், இருக்கிறது?"

"கடவுள் தீர்த்துவிடுவார் என்று நாங்கள் நம்பியிருந்தால், தங்களைத் தேடி வரவேண்டிய தொல்லையே எங்களுக்கு இருந்திராதே, டாக்டர்!"

"என்ன சார்! முழு நாஸ்திகம் பேசுகிறீர்கள்?"

ஒருவருக்கு முதுகிலே இராஜபிளவை. ஆங்கில மருத்துவர் சத்திர சிகிச்சை செய்கிருர். நோயாளி யின் நெருங்கின உறவினர் ஒருவருக்கும், டாக்ட ருக்கும் மேற் குறித்துள்ள விதத்தில் வாக்குவாதம் நடைபெறுகிறது. டாக்டர் கூறுகின்ற கோட்பாடு தமக்குப் பிடிக்காததாக—எரிச்சலை உண்டாக்கக் கூடியதாக—இருந்தபோதிலும், நோய் மட்டும் குணமானல் போதுமென்ற கருத்துடையவர்கள், டாக்டர் கூறுவதற்கெல்லாம் 'ஆமாம்' போட்டு விட்டு, அவருக்கு மனத்திருப்தி ஏற்படும் முறையில் நடந்து கொண்டு, அவர் தயவைப்பெற்று, தங்கள் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொள்வார் கள். இந்தப் போக்கினைத்தான், எவரிடத்திலும், எந்தப் பணியிலும், நாம், பெரும்பாலும் காணமுடி யும். கொண்ட கொள்கையில் வீர வைராக்கியம் உடையவர்களை மட்டும் இந்தப் பொது விதியால் கட்டுப்படுத்த முடிவதில்லை. பிறர் தயவைப் பெறு வதற்கு இச்சகம் பேசும் குணம்—வெறுக்கத் தக்க தொன்ருன போதிலும், இன்றியமையாததாகிறது இவ்வுலக வாழ்விற்கு. அதனைப் படைத்திராதோர், பிறரின் பரிதாபத்திற்கும் பரிகாசத்திற்கும் உரிய பண்புடை யோராகவே பெரிதும் கொள்ளப்படு கிருர்கள்.

ஒருவருடைய தன்மான உணர்ச்சி, கொண்ட கொள்கையில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாடு, போற்றப்படுவதற்குப் பதில், பழித்துப் பேசப்படுவ தோடு, 'வாழக் கற்காதவர்' என்ற வசைமாலையும் அத்தகையவருக்குச் சூட்டப்படுகிறது. தேவை எவ்வளவு இருந்தபோதிலும், எந்தச் செல்வர் பொருளை வாரி அளித்தபோதிலும், அவரிடம்

இருக்கும் குறைபாடுகளைக் குறைத்துக் கூறி, இல்லாத பண்பினை இருப்பதாக முகஸ்துதிபாடி, கொள்கையை அடகுவைத்து வாழ்ந்தறியாத, சில சுயமரியாதைக்காரர்களிலே நமது அஞ்சாநெஞ்சன் அழகிரி தலைசிறந்தவராவர். தொடக்கத்தில் குறித்துள்ள சொல்லாடல், அவர் வாழ்நாளில் நேர்ந்த எண்ணற்ற சம்பவங்களிலே ஒன்றாகும்.

அழகிரியின் ஆற்றல், தேசீயப் போர் முனையின் தலைமைச் சொற்பொழிவாளர் பதவியைதேடித் தந்ததாயினும், அதற்கான தோழர் P. T. இராஜன் அவர்களின் துணையும் குறைத்து மதிப்பிடக் கூடியதன்று. தோழர் இராஜனுக்கு எது பிடித்தமாக இருக்கிறதோ, அதுவே - மேலும் அவருடைய தயவைப் பெறுவதற் கில்லையாயினும், வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளாமல் இருப்பதற்காகவாவது-தனக்கும் பிடித்தமானது என்பதைக் காட்டிக் கொள்ள, வேறு யாராக இருந்தாலும் வேஷம் போட்டிருப்பார்கள். ஆனல் நூற்றுக்கு நூறு சுதந்திர உணர்வுடைய அஞ்சா நெஞ்சரா அவ்வாறு நடிப்பார்? நடிக்காததோடு மட்டும் அல்ல, தோழர் இராஜனின் முருக பக்தியையே நையாண்டி செய்வார். அழகிரியின் கிண்டலுக்கு, அவரும் ஆத்திரப்பட மாட்டார். சிறிது சிரித்துக் காட்டுவார். சீற்றத்திற்குச் சிரிப்புத் திரையிட்டு மூடி மறைக்கும் சிறந்த தந்திரமாக இருந்தாலும் இருக்கலாம்!

ஒருமுறை திண்டுக்கல்லை அடுத்துள்ள கிராமத்திற்கு யுத்தப் பிரசாரத்திற்குச் சென்றுவிட்டு நடு இரவில் மதுரை திரும்பினேம். கொடைக்கானல்

ரோட் வந்ததும் மோட்டார் காரில் பெட்ரோல் தீர்ந்து விட்டது. பெட்ரோல் விற்குமிடம் அரை பர்லாங் தொலைவில் இருக்கிறது. பாதை இறக்க மானது. இறக்கமாக இருக்கவே, கார் மெதுவாக உருண்டு கொண்டிருக்கிறது. "முருகா! பெட் ரோல் விற்குமிடம் வரையிலாவது கார்போய் நிற்க வேண்டும்" என்று இராஜன் வாய்விட்டுக் கூறிவிட் டார். பின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அழகிரி, "கார் மதுரை வரையில் போக முருகனை வேண்டுங் கள் !" என்று வெடுக்கென்று கூறினார். இதனைக் கேட்டதும், வாய்விட்டுச் சிரித்துவிட்டோம், நானும், தோழர் சவுந்திரபாண்டியன் அவர்களும். தோழர் இராஜன் சொன்ன தென்ன? "போதும் போதும் அழகிரி! நீ இருப்பதை மறந்து சொல்லிவிட்டேன்!" அழகிரி சொன்ன வார்த்தையிலும், இந்தச் சொற் கள் எங்களுக்கு முன்னிலும் அதிகமான சிரிப்பைக் கொடுத்தது. அழகிரியின் சுதந்திரப் போக்கையும், இலட்சிய நோக்கையும் ஒருவராலும் குறைத்து எண்ண முடியாது என்பதற்கு, இது ஒன்றே போதுமானது.

தன் மானம் பெரிதல்ல—தரணி வாழ்வுதான் பெரிதென்று அவர் நினைத்திருந்தால், ஏழடுக்கு மாளிகை, இன்று பட்டுக் கோட்டையில் அவருடை யது என்று இருந்திருக்கும். எவ்வளவோ வேலி நன்செய் புன்செய் நிலங்களை, தம் பின் சந்ததியார் களுக்கு விட்டுப் போயிருக்கலாம், தமது நாக்கைக் கொஞ்சம் வளைத்துப் பேசி இருந்தால். குறிக் கோளை மறந்தல்ல—விட்டுக் கொடுத்துமல்ல— கொஞ்சம் தணித்துக்கொண்டு, தாக்குதலையும் நிறுத்திக் கொள்ளுகிறேன் என்று, சாடைகாட்டி

இருந்தால் கூட, மட்டற்ற செல்வம் அவரிடம் அடைக்கலம் புகுந்திருக்கும். ஆனால், அழகிரி, 'கொள்கை கொள்கை' என்றே கதறிக் கதறி மடிந்தார். ஊரிலே பெரிய பிரபு; பெருத்த பண பலம்; அதிகாரிகளின் ஆதரவு; இவ்வளவு இருந்தும், அவருக்கு எதிராக அழகிரி, எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றியே பெறுவார்—அதுவும் முதல் தரமான வெற்றி; எதிர்த்தவருக்கு மூக்கறுபடும் முழுத் தோல்வி. பணமூட்டை பதுங்கவும், பஞ்சை வெற்றிபெறவும் எவ்வாறு முடிந்தது? பணம் பாதாளம் வரையில் பாயும் என்கிறார்களே, அது பட்டுக் கோட்டை விஷயத்திலும், அழகிரி இடத்திலும் புறமுதுகிட்டு விட்டது. ஆச்சரியம் நிறைந்தது; ஆனால் உண்மையில் நிகழ்ந்தது. அழகிரியின் நாக்கு அவ்வளவு வளமானது; நெஞ்சு வைரமேறியது. எனவே, பட்டுக்கோட்டை மக்களின் நிரந்தர தளபதியாக ஆக அழகிரியால் முடிந்தது. அவருடன் பிறந்து நீங்காது நிலைத்து நின்ற ஏழ்மையும், பட்டுக்கோட்டை மக்களின் அன்பைப் பெறுவதற்கு முக்கியமானதோர் காரணமாக இருந்ததென்று கூறுவது மிகையாகாது.

அவருடைய பொதுவாழ்வு காங்கிரஸ் இயக்கத்தோடு தொடர்புடையதாகும். அவரை அந்த அணியிலிருந்து, நமது முகாமிற்குக் கூட்டி வந்த பெருமை முழுதும் தோழர் S. V. லிங்கம் அவர்களுடையது. இடந்தெரிந்து, காலமறிந்து, தகுதி வாய்ந்தவர்களையும் தேடிப் பிடித்து, நினைத்த காரியத்தைத் தொடங்கி—இடையில் தோல்வி ஏற்பட்டாலும் சோர்வடையாது—வெற்றி காணும் பேராற்றல் வாய்க்கப்பெற்றவர் தோழர் S. V. லிங்

கம். எவர் எவருக்கு எது எதில் விருப்பம் இருக்கிறதோ, அதனை அவர் அவர்கள் வாய்விட்டுக் கூறுமுன்பே, நன்கு தெரிந்து கொண்டு, அவர்களாக மேல் விழுந்து வந்து இயக்கப் பணிபுரியும் அளவிற்கு, அவர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொள்ளும் திறமை மிக்க ஓர் தோழர் S. V. லிங்கம். எந்தப் பள்ளியிலும் படித்துப்பட்டம் பெறாமலே, ஒருவரைப் பார்த்த உடனே, அவருடைய மனவளத்தையும் குண நிலையையும் கணக்குப் போட்டுவிடும் அறிவு படைத்தவர் அந்த மாயவரம் தோழர். விவாதத்திற்கும், அவருக்கும் வெகுதூரம். பிரசங்கம்—கருத்துடையது—ஆனல் கவர்ச்சி அற்றது—ஏன்—சில சமயங்களில் கேட்பவர்களுக்கு ஆத்திரத்தைஉண்டு பண்ணினாலும் பண்ணக் கூடும். அவரிடம் எவ்வளவு குறைபாடு இருந்தபோதிலும், அவரை ஒரே ஒரு வகையில் எவராலும் குறை சொல்ல முடியாத அளவிற்குத் தூயவர். அவர் சுகம் தேடியே, அன்றி சொத்துத்தேடி யன்று.

எப்படியோ தோழர் S. V. லிங்கம், அழகிரியை நண்பராக்கிக் கொண்டு, தம்முடன் இரண்டொரு ஊருக்கு உடன் வரும் நிலையை அழகிரிக்கு உண்டாக்கி விட்டார். நாகையிலே அழகிரி, தனது பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொண்டிருந்த, இராமாயணத்தை, பொதுக்கூட்டத்தில் ஆராயப் புகுந்தார். 'இராமன் கடவுள் இல்லையா?' என்ற கேள்வி கிளம்பிற்று. 'இல்லை—ஒருக்காலும் இல்லை' என்று கம்பீரமாகக் கூறினர் அழகிரி. 'பிள்ளையார் கூடவா இல்லிங்க' என்ற கேள்வி முன்னதைத் தொடர்ந்தது. பொறுமை இழந்தார் அழகிரி; முதல் கூட்டமல்லவா? 'பிள்ளையாரும்

இல்லை, புடலங்காயும் இல்லை; உட்கார்' என்று அழகிரி கட்டளை பிறப்பித்தார், பள்ளியிலே ஆசிரியர், சந்தேகத்தைக் கேட்கும் பிள்ளைகளை அதட்டுவதுபோல். கூட்டத்தில் குழப்பம்; பின்னர் எப்படியோ அமைதி ஏற்பட்டது. நாகையில் பண்படாத பிரசங்கியாகப் பொது வாழ்வைத் தொடங்கியவர் தான், கல் வீசலாம் என்று மடியில் கற்களை சுமந்து வந்திருப்பவன் மயங்கிப்போய் வாய்பிளந்து நிற்கவும், கல்லைக் கையில் எடுத்தவன் பக்கத்தில் இருப்பவர் காணாது மறைத்துக்கொண்டு சொக்கிப் போய்த் தரையில் படிமானமாக உட்கார்ந்து கொள்ளவும், மணிக்கணக்கில், நகைச்சுவை ததும்பத் ததும்ப, தங்குதடங்கல் இல்லாமல் புராணப் பொய்களை அம்பலமாக்கியும், பிராமணீயத்தைப் பிய்த்தெறிந்தும், கற்பிதக் கடவுளர்களின் காமக் கூத்தைக் கண்ணியமான முறையில் கிண்டல் செய்தும் சொற்பொழிவாற்றும் சிறந்த பேச்சாளராக விளங்கினர்.

பொதுவாழ்வு என்பது இன்று பேச்சாளர் என்னும் நிலையில் தான் இருக்கிறது. காலா காலத்தில் நல்லுணவு, வேளா வேளையில் உறக்கம், நல்லொழுக்கம், முதலிய உடற்பேணும் உபாயத்தைத் துளியும் தவறாது மேற்கொண்டால், பேச்சாளர்களை எந்தவித உடற்பிணியும் அவ்வளவு விரைவில் தீண்டிவிடாது; மரணமும் வேகமாகச் சென்று தழுவிக் கொள்ளாது. உணவு சத்தானதானாலும், உறக்கம் ஒழியாது இருந்தாலும், உயர்ந்த ஒழுக்கத்தை மேற்கொண்டாலும், வறுமை, பேச்சாளரின் நெஞ்சிலே குடியேறி விட்டால், அதே நிமிடத்தில் பற்பல நோய் அவருடைய தேகத்தை

இருப்பிடமாக்கிக் கொள்ளும். வேறுபல இருந்த போதிலும், இதுவேதான் முதன்மையான காரணம். அழகிரி, பொதுவாழ்வில் புகுந்த நான்கைந்து ஆண்டுகளுக் குள்ளாகவே பிணியாளராகப்போய் விட்டதற்கு, பொதுவாழ்வு, அவருக்குப் புகழ்தேடித் தந்த அளவிற்குப் பொருள் தேடித் தரவில்லை.

அந்தக் காலத்தில் அவருக்குக் குன்ம நோய். எப்பொழுது பார்த்தாலும் மருந்து சாப்பிட்டுக் கொண்டே இருப்பார். கூட்டத்திற்கு வந்து, பேச முடியாமலே வயிற்று வலியோடுபோய் படுத்து விடுவதும் உண்டு. பாதிப் பேச்சோடு முடித்துக் கொள்வதும் உண்டு. அந்த நோய் அவரை அதிகத் தொல்லைக் குள்ளாக்கிக்கொண்டு இருந்தது. பெரியாரின் முன்தோன்றல் தோழர் கிருஷ்ணசாமி அவர்களிடத்திலும் சிகிச்சை செய்துகொண்டிருக் கிறார். பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள் சென்னை தங்கசாலை வீதியில் இருந்தபொழுது, அவரிடத் திலும் மருத்துவம் செய்துகொள்ள, அவர் மருத்து வச் சாலையில் சிலநாள் அழகிரி தங்கி இருக்க வேண்டியதாயிற்று. அதுசமயம் சென்னையில் 'ஜகத்குரு' சங்கராச்சாரி முகாம் இட்டிருக்கிறார். அவருக்குப் பாத காணிக்கை செலுத்திய நம்மவர் களைக் குறித்து, தோழர் S. குருசாமி கொஞ்சம் கார சாரமாகப் பேசிவிட்டார். இதனை ஒரு பெரிய பிரச்னையாக வைத்துக்கொண்டு, காலஞ் சென்ற டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் ஆதரவில் நடந்த பத்திரிகையில்,தோழர் குருசாமியைக் கொஞ் சம் மட்டரகமாக எழுதிவிட்டார் அதன் ஆசிரியர். அந்த ஆசிரியர் ஏற்கனவே நமது இயக்கத்தில் தொடர்புடையவராகையால் நேரில் கூப்பிட்டுக்

கேட்க விரும்பினர் அழகிரி. தோழர் S. V. லிங்கம் ஆசிரியரை அழைத்து வந்தார். அந்த நேரத்தில் அங்கு தோழர் A. பொன்னம்பலனாரும் இருந்தார். இதனை நமது கொள்கை எதிரிகள், தங்களுக்கு ஒரு வாய்ப்பாகக்கொண்டு, அந்த ஆசிரியரை அடித்து விட்டதாக, ஜார்ஜ் டவுன் கோர்ட்டில், தோழர்கள் அழகிரி, பொன்னம்பலனார், லிங்கம் ஆகியவர்கள்மீது வழக்குத் தொடுத்து விட்டார்கள். பொதுக் கூட்டத்தில் மட்டுமல்ல, வழக்கு மன்றத்தில்கூடத் தம்மால் நன்கு வாதிக்க முடியும் என்பதை அழகிரி மெய்ப்பித்துக் காட்டினர்.

டில்லி சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது. சென்னை நகரத் தொகுதிக்கு A. இராமசாமி முதலியாரும், வர்த்தகத் தொகுதிக்கு R. K. ஷண்முகம் செட்டியாரும், கோவைத் தொகுதிக்கு டாக்டர் P. வரதராஜலு நாயுடுகாரும் தேர்தலுக்கு நிற்கிறார்கள். இதற்காக, தேர்தல் கூட்டம் ஒன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று அபேட்சகர்களும் பேசிவிட்டார்கள். பெரியார் எழுந்த உடனே, எப்படியாவது அவரைப் பேசவிடாமல் செய்துவிட வேண்டுமென்று பார்ப்பன மாணவர்களும் மற்றவர்களும் முற்கூட்டியே சதியாலோசனை செய்துகொண்டு மணலை வாரி மேடையை நோக்கி வீசி எறிய ஆரம்பித்தனர். பெரியாரின் சிந்தனை சக்தியைத்தான் அவர்கள் அறிவார்களே யன்றி, அவருடைய உள்ள உரத்தை அவர்களால் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்? மண்மாரி அதிகரிக்க அதிகரிக்க, பெரியாரின் பேச்சொலியும் சிறுகச் சிறுக பெருத்துக்கொண்டே வந்தது.

பெரியார் எடுத்துக்கொள்ளும் முயற்சி, அழகிரிக்கு, "நாம் இந்த மேடையில் இருக்கும்பொழுதா பெரியார் இவ்வளவு கஷ்டப்பட்டு உரத்துப் பேசவேண்டும்? நாம் அதனைப் பார்த்தும் சும்மா இருப்பதா?" என்று ஆத்திரம் கொண்டு, பெரியார் அவர்களை உட்காரும்படி வேண்டிக்கொண்டு, ஒருமணி நேரத்திற்கு அதிகமாக பிராம்மணீயத்தை, பெரியாரைக் காட்டிலும் அதிகமாகக் கண்டித்துப் பேசி, கூட்டத்தை வெற்றிகரமாக முடித்தார்.

நமது தாயார் நாகம்மையார் அவர்கள் இன்றும் உயிரோடு இருந்திருப்பார்களேயானல், அழகிரியின் முடிவுகூட இன்னும் கொஞ்ச காலம் பொறுத்தே ஏற்பட்டிருக்கலாம் என்றுகூடச் சொல்லலாம். பெரியாரின் அறிவிலும், சொல் திறத்திலும் அழகிரிக்கு எவ்வளவு நம்பிக்கையும் மதிப்பும் இருந்ததோ, அதைக் காட்டிலும் பன்மடங்கு நாகம்மையார் அவர்களிடம் அன்பு இருந்தது. பெற்றெடுத்த தாயெனவே கொண்டிருந்தார். அம்மையாரின் படத்தைத் திறப்பதென்றால் அழகிரிக்கு ஓர் அலாதியான பிரியம். இறுதியாக விடை பெற்றுக் கொண்ட ஈரோடு மாகாண மாநாட்டில்கூட அம்மையாரின் படத்தைத் திறந்து வைக்கும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட் டிருந்தது.

அழகிரிக்கு அம்மையாரிடத்திருந்த அன்பின் காரணமாக, பெரியார் அவர்களின் கட்டளையை மீறவும், எதிர்த்துப் பேசவுமான துணிவு கொண்டிருக்கிறார்.

கோவை ஜில்லா சுயமரியாதை மாநாடு, ஈரோட்டில் நடைபெற்றது. டாக்டர் பி. வரத

ராஜலு நாயுடு அவர்கள் தலைமையில், தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்கள் நாகம்மையார் படத்தைத் திறந்து வைத்தார்கள். அழகிரிசாமியும் அதுகாலை பேசினார். காலம் அதிகமாகிவிட்டது என்னும் காரணத்திற்காகப் பேச்சை சுருக்கமாக முடித்துக் கொள்ளுமாறு அழகிரிக்கு சமிக்ஞைசெய்தார். அழகிரியா விட்டுவிடுபவர்? பெரியார் மனம் கொஞ்சம் புண்படும் மாதிரியாகக்கூட நடந்து கொண்டார் என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

1931-ம் ஆகஸ்ட் மாதத்தில் விருதுநகரில் சுயமரியாதை மாகாண மாநாடு நடைபெற்றது. அடுத்த திங்களிலேயே திருவாரூரில் சுயமரியாதைத்தொண்டர் மாநாடு ஒன்று தோழர்கள் T. N. இராமன், இலட்சப்பா, R. இரங்கராஜு முதலியவர்களின் அரிய முயற்சியால் கூட்டப்பெற்றது. அம் மாநாட்டின் தலைவர் நமது அழகிரிதான். எழுதும் பழக்கம், அவர் அறியாதது. எழுதிப் படிப்பது, அவருக்குப் பிடிக்காதது. எந்த நிமிஷத்திலும், எப்பொருள் குறித்தும், நாட்கணக்கில் வேண்டுமானாலும், பேசும் பேராற்றல் மிக்க தோழரல்லவா அழகிரி! அம் மாநாட்டில் தலைவர் என்னும் முறையில் "சுயமரியாதைக்காரர்கள் யாவர்? சுயமரியாதைக் கோட்பாடுகள் எவை எவை?" என்பதைத் தெளிவாக விளக்கிக் காட்டினார்.

சென்னையில் நமது இயக்கம் பரவினதற்கு, அழகிரியின் தொண்டு பெரும் பங்கு உதவியாக இருந்தது. அணுவை அண்டமாக்கிக் காட்டுவார். மலையை மண்ணாங்கட்டி நிலைக்குக் கொண்டுவந்து

விடுவார். இவ்வளவும் எப்படி சாத்தியமாக்ககூடும் என்று எவருக்கும் சந்தேகம் பிறப்பது இயல்பு. அழகிரியின் அந்தக்காலத்துப் பேச்சைக் கேட்டவர்களால்தான், இதன் உண்மையை நன்குதெரிந்து கொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக ஒன்று கூறுகிறேன். 'வண்ணான் வந்தானே-வண்ணார சின்னான் வந்தானே' என்ற பாட்டை, இசைத்தட்டிலே ஏற்றி விட்டார்கள். அந்தெம்மாங்குப் பாட்டைக் கேட்டு மகிழாதவர்கள் கிடையாது. ஆனால், துணிவெளுக்கும் சமூகத்தினரை, அந்தப் பாட்டுமிரம்ப இழிவாக சித்தரித்திருந்தது. அவர்கள் நெஞ்சம் புண்பட்டுப் போய்விட்டது. அழகிரி துவக்கினார், அந்தப்பாட்டை எதிர்த்து, சொற்போர். சென்னையிலும், அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள அந்தச் சமூகத்தினரை உறக்கம் நீங்கி எழுந்திருக்கச் செய்தார். பாட்டுக்கு எதிராகக் கிளர்ச்சி வலுத்தது. சென்னை 'மெயில்' பத்திரிகை ஒத்துழைத்தது. அரசியலாரின் கருத்தை, அழகிரியின் கிளர்ச்சி, கவர்ந்தது. முடிவில், அரசியலாரின் ஆணையால், இசைத்தட்டு என்றென்றும் ஊமையாக்கப் பட்டுவிட்டது. இந்த வெற்றியின் அறிகுறியாகப் பண்டிட் ஆனந்தம் அவர்கள் இல்லத்தில், அழகிரிக்கு ஒரு பாராட்டு விருந்து வைத்திருந்தனர், சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தார். காலஞ்சென்ற C. D. நாயகம் கூட அதில் கலந்து கொண்டு, அஞ்சா நெஞ்சனைப் பாராட்டி இருக்கிறார்.

தோழர்கள் நாயனு சுப்ரமணியம், குஞ்சிதம்-குருசாமி, M. S. முத்து, C. தங்கராஜ். மயிலை சீனி

வெங்கிடசாமி, A. A. கபாலமூர்த்தி, T. இராதா கிருஷ்ணன்-நராயணி அம்மாள், S. இரங்கநாதன், சின்னகண்ணு, S. பிரகாசம், M. நடேசன் முதலிய வர்கள் சென்னை சுயமரியாதை இயக்கத்தின் ஆரம்ப வரலாற்றில் முதல் இடம் பெறவேண்டிய வர்கள். அழகிரியின் அடுத்த அடுத்த படை எடுப்பு, இவர்களுக்கு இயக்கப்பணிபுரிய ஊக்கத்தையும், இயக்கத்திற்கு ஆக்கத்தையும் கொடுத்து வந்தது.

ஐந்தடுக்கு மாளிகை, காற்று நுழைய முடியாத கல்வீடு, நாகை பக்கிரிசாமியின் 'நவமணி' காரியாலயம், இவ்வளவும் அழகிரியின் சென்னை தங்குமடங்கள். ஒவ்வொரு சுற்றுப் பிரயாணத்தின் போதும் இட மாற்றங்கள் இருக்கும். அது சமயத்தில், பி. பால சுப்பிரமணிய முதலியாரின் அரவணைப்பு கிடைத்தது மறக்கக்கூடியதன்று.

பின்னர், சென்னையில் நடைபெற்ற சுய மரியாதை மாநாட்டின் வரலாறே வெகு விசித்திர மானது. பணம் படைத்தவர்களுக்கு நமது கூட் டுறவு தேவைப்படாத நேரம். நமது இயக்கத்தின் பெயர் கேட்டாலே, காதுகளைக் கோமியத்தால் கழுவி, தங்களைப் புனிதவான்களாக ஆக்கிக் கொள்ளவும் தயாராகிவிடும் அளவிற்கு, வைதிகக் குட்டையில் அழுந்திப் போயிருந்தார்கள் நமது சமுதாயத் தலைவர்கள். அரசியலிலே பிராம்மணீ யம் கூடாதென்பார்கள்; ஆனால், அகத்திலே பார்ப்பனப் புரோகிதர் பாதத்தில் பலமுறை பணிந்து, பாபத்தைப் போக்கிக் கொள்ளும் 'பாபி' களாக வாழ்ந்துவந்த காலம். நாஸ்திகர்கள்—மத விரோதிகள்—மரியாதை தெரியாத மதியிலி

கள்—என்றெல்லாம், அறிவிழந்து ஆவேசத்திற்கு அடிமையாகி, நமக்கு வாழ்த்துக் கூறும் மக்களிடை, நாம் மனமுடைந்து போகாமல், பலன் கருதாது இயக்கப் பணிபுரிந்து வரும்பொழுது, பணக்காரர்களுக்கு நம்மை நாடவேண்டிய அவசியம்தான் எங்கிருந்து ஏற்படப் போகிறது? நாம் மாநாடு கூட்டுவதும், பொதுக் கூட்டம் போடுவதும், இயக்கத் தொண்டாற்றுவதும், அழகிரி அடிக்கடி கூறுவதுபோல் 'செம்பு—பித்தளை-தகரடப்பா-போணி-' போன்றவர்கள் கொடுத்து உதவிய செப்புக் காசுகளின் துணைக் கொண்டுதான்.

பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது மூன்ருவது சுயமரியாதை மாநாடு. தலைவர் கே. எம். முத்துசாமி வல்லத்தரசு. திருவாரூர் இராமன் வரவேற்பாளர். மகாநாட்டில் பரபரப்பைத் தந்த பிரச்னை 'சுயமரியாதைக்காரர்கள், ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவு காட்டுவதா இல்லையா?' என்பதாகும். ஜஸ்டிஸ் கட்சி ஆரம்ப முதல் முக்கியத் தொண்டராக இருந்து உழைத்து உருக்குலைந்துபோன காலஞ்சென்ற T. V. சுப்ரமணியம், ஜஸ்டிஸ் கட்சிக்குப்பணி புரியுங்கள் என்று அன்பழைப்பு அளிக்கிருர் மாநாட்டில். அந்த அழைப்பை, மாயாமோகினி என்று சித்தரித்தார், ஜஸ்டிஸ் கட்சியின் அடிப்படையைச் சுக்கு நூருக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள தோழர் ஜீவானந்தம். மாநாட்டிற்கு வந்துள்ள தோழர்களில் பெரும்பாலோர், ஜீவாவின் படை வரிசையில் இடந்தேடப் போட்டி இடுகிருர்கள். சுப்ரமணியத்தின் சிரித்த முகம், சிவப்பேறி பின்னர் கருத்துச் சுருங்குகிறது. தலைவர் பண்படாதவர்; இருந்தாலும் பொதுச்

சேவையிலே நாட்டம் மிக்கவர். எழுந்தார் அழகிரி. உடைத் தெறிந்தார் ஜீவாவின் வாதத்தை. சொல்லுக்குச் சொல் சம்மட்டி அடிதான். வெற்றி, அழகிரியை வந்தடைந்தது. ஒரே கைதட்டல். மாநாடு முடிவுற்றது. தலைநகரிலும், தன்மான இயக்கத்திற்கு நல்லதோர் இடமும் தேவையுமிருக்கிறது என்பதை, இந்த மாநாடு எடுத்துக் காட்டிற்று.

பிரகாசம்—ஓமந்தூரார்—குமாரசாமி ராஜா—என, இன்று காங்கிரஸ் பிரதமர்கள் மாறிமாறிக் காட்சி யளிக்கிறார்களே, இதற்கு எது மூலகாரணமாக இருக்கிறதோ, அதே காரணத்திற்காகத்தான், அன்று, ஜஸ்டிஸ் கட்சியில் காலஞ்சென்ற முனுசாமி நாயுடு காரு மாறி பொப்பிலி ராஜா வர வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பொப்பிலிதான் ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் என்பதை நாட்டுக்கு அறிவிக்க, அவர் தலைமையில் தஞ்சாவூர் இராமநாதம் செட்டியார் ஹாலில் மாநாடு நடைபெற்றது. முனுசாமி நாயுடுகாருக்குப் பக்கத் துணையாக இருந்த மற்றொரு ஆந்திர ஜமீந்தார், ஆந்திரர்களைத் தஞ்சைக்கு இறக்குமதி செய்து, மாநாட்டில் குழப்பத்தை உண்டாக்கினர். அந்தக் குழப்பத்தில் பொப்பிலி இராஜாவிற்கு எந்தவிதத் தீங்கும் நேராமல் பார்த்துக் கொண்ட பெருமை பொதுவாக தோழர் வல்லத்தரசுக்கும் குறிப்பாக அழகிரிசாமிக்கும், அவருடைய பிரதம 'சீடர்' பேராவூரணி, குழந்தைக்கும் சேரவேண்டியதாகும்.

மாகாண சட்டசபைத் தேர்தல் வந்து விட்டது. பீபிள்ஸ் பார்டி என்ற ஓர் அரசியல் கட்சியை பித்தாபுரம் இராஜா ஆரம்பித்து விட்டார். தமிழ்-தெலுங்கு-ஆங்கிலம ஆக மூன்றுமொழி

களிலும் ஏடுகள் துவங்கப்பட்டு விட்டன. அழகிரிக்கும் அழைப்பிற்குமேல் அழைப்பு, அந்தக் கட்சியில் சேர்ந்துள்ள கூட்டுத் தோழர்களிடமிருந்து தினம் தினம் வந்தவண்ணம் இருக்கிறது. வெறும் நாவசைக்கும் ஓசையோடு மட்டும் நின்றுவிடவில்லை. கலகல வென்ற சப்தம் கூடத்தான் கேட்டது! அழகிரியின் பை நிறைந்தது! நெஞ்சும் நனைந்தது! ஆனல்........ஆனல்...........அழகிரி புதிய கட்சிக்கு ஒரு விநாடியும் சேவை செய்யவில்லை! சேவை செய்ய நெஞ்சினலும் நினைக்கவில்லை!

ஒருமுறை தோழர் கே. எம். பாலுவை-புதுக் கட்சியில் முக்கியஸ்தர்—சந்திக்க அழகிரி மவுண்ட் ரோட்டிலிருந்த அந்தக் கட்சிக் காரியாலயத்தின் பக்கத்துக் கட்டிடத்தின் வெளியில் நின்றுகொண்டு இருக்கிருர். நான் ஜஸ்டிஸ் ஆபிசிலிருந்து வெளியில் வந்தேன். மாலை ஐந்து மணிக்குமேல் இருக்கும். இருட்டுகின்ற நேரம். அழகிரியைச் சந்தித்தேன். எனக்கு அவரிடத்தில் எல்லையற்ற அன்பு உண்டு. அவருக்கும் என்னிடத்தில் அப்படித்தான்.

அந்தச் சந்திப்பும்; அதன் பின்னர் நிகழ்ந்த சம்பவமும் என்றும் மறக்கக்கூடிய தன்று. அவரும் மாலை 'காபி' அருந்தவில்லை. என் நிலையும் அதுதான். என்னிடத்தில் இருப்பு ஒரு அணுத்தான். அவரிடத்தில் அதுவும் கிடையாது.

"டேய்! கல்யாணம்! எவ்வளவு பணம் வைத்திருக்கிருய்?"

"ஏது பணம்? ஒரு அணுத்தான் வைத்திருக்கிறேன்!'

"நீ காபி சாப்பிட்டு விட்டாயா?'

"இன்னும் இல்லை!"

"இருவரும் காபி சாப்பிட்டாக வேண்டுமே என்ன செய்வது ?"

"என்னைக் கேட்டால்!"

இப்படி நாங்கள் பேசிக்கொண்டு இருக்கும் பொழுதே, மலையாளி ஒருவன் 'சாயா' என்று கூவிக்கொண்டு எங்கள் அருகில் பாதை வழியே சென்றான். அப்பொழுது ஒரு சிறிய 'டம்ளர்' 'சாயா'வின் விலை காலணாதான். அவனிடத்தில் 'மெது வடை'யும் இருந்தது. அதன் விலையும் காலணாதான். அவரும் ஒருவடை வாங்கிக் கொண்டார்; எனக்கும் ஒருவடை வாங்கிக் கொடுத்தார். 'சாயா'வும் அதே மாதிரிதான். ஒரு அணாவைக் கொடுத்து விட்டேன். இந்த முறையில் இருவரும் பசி யாறினோம் ஒரு அணாவில்!

சில நிமிஷ நேரத்திற் கெல்லாம் தோழர் கே. எம். பாலு கட்சிக்காரியாலயத்திற்கு வந்துவிட்டார். அழகிரி பார்த்தார். அரைமணி நேரத்திற்குப் பின்னர் வெளியில் வந்தார். அன்று இரவு நல்ல உணவு அருந்தினோம் இருவரும். எழும்பூர் புகை வண்டி நிலையத்திற்குச் சென்று, இரண்டாம் வகுப்பு வண்டியில் அவரை ஏற்றி விட்டுவிட்டு வீடு திரும்பினேன். அவர் வண்டியில் ஏறுவதற்கு என் உதவி விலக்க முடியாத தேவையாக இருந்து விட்டது!

முதல் முதலாக அவர் அறிஞர் அண்ணாவை நேருக்கு நேர் சந்தித்தது துறையூரில் நடைபெற்ற

மாநாட்டில்தான். மாநாட்டின் தலைவர் அண்ணா. 'கண்டறியாதன கண்டோம்' என்று 'ஆனந்த விகடன்' ஒரு கூடார்த்தப் படமும் போட்டு, அதே தலைப்பில் கட்டுரை ஒன்றும் எழுதி இருந்தது. அதற்கு எழுத்துக்கு எழுத்து வரிக்கு வரி, அண்ணா பதில் சொல்லிக்கொண்டே வந்து, ஒவ்வொரு விஷயம் முடிகிற பொழுதும் 'கண்டறியாதன கண்டோம்' 'கண்டறியாதன கண்டோம்' என்று முடித்துவருகிறார். அதனை அழகிரி கண்டார் - கேட்டார். 'கேட்டார்' என்று சொல்லுக்கு, அழகிரிக்கு இருந்த மனக் கிளர்ச்சியைச் சுட்டிக் காட்டும் தன்மை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அண்ணாவின் 'சொற்பொழிவிலே, அழகிரி இரண்டறக் கலந்துவிட்டார் என்பது பொருந்தக் கூடும் என்று நினைக்கிறேன். 'அண்ணா ஒருமேதை' 'தமிழரின் சொத்து!' 'தமிழர் பெற்ற பேறு!' இப்படி எல்லாம் வாய்விட்டுக் கூறினார், உள்ளத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சியின் வேகம் தணியும் வரையில்.

யாற்றூர் செய்கின்ற தீங்கு சில சந்தர்ப்பங்களில், கேடு அடைவோர்களிடை, அதற்குமுன் என்றும் எக்காரணம் பற்றியும் காணமுடியாத ஒற்றுமையை உண்டாக்கி விடும் என்பதற்கு ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் புகுத்தப்பட்ட கட்டாய இந்தியும், அதன் பலனைத் தமிழர்களிடை ஏற்பட்ட ஒருமைப்பாடும் குறிப்பிடத் தக்கதாகும். டாக்டர் நாயரால் முடியவில்லை, டாக்டர் நடேசனாரால் ஆகவில்லை, தியாகராயரால் கைகூடவில்லை, பெரியார் இராமசாமியால் சாத்தியமாகவில்லை, தமிழர்களிடை ஐக்கியத்தைத் தோற்றுவிக்க.

நிதி இழந்தனர்; சுகமிழந்தனர்; பழி ஏற்ற னர்; மனமுடைந்து மாண்டனர்; தமிழர்கள் என் றும்போல் பிணங்கிக் கிடந்தனர். ஆச்சாரியாரின் கட்டாய இந்தி. தலைவர்களின் முயற்சியை - உழைப்பை - அபிலாஷையை நிறைவேற்றி வைத்துவிட்டது, ஒரு நொடியில். 'தமிழ் வாழ்க' 'இந்தி ஒழிக' என்ற முழக்கம் தமிழர்கள் வாழும் இடம் எங்கும் ஒரே காலத்தில் கிளம்பியது. இதி காச புராணங்கள் இருள் சூழ்ந்தது. சங்க இலக்கி யங்கள் தமிழர் நாவில் சஞ்சரிக்க ஆரம்பித்தன. சிலம்பும் - மேகலையும் உரிய இடத்தை அடைந்தன. தமிழர் வாழ்வில் புது மணம் வீசத் தொடங்கிற்று. விழிப்படைந்தனர் தமிழர். மறைந்திருந்த தமிழ் முகிலைக் கிழித்துக் கிளம்பும் முழுமதியெனக் காட்சி அளிக்க ஆரம்பித்தது. தனித்தமிழ் ஆர்வம் தலை தூக்கிற்று. ஆச்சாரியார் ஆத்திரத்தின் விளைவு இது; தமிழர் பெற்ற பெரும் பேறு.

'நகரதூதன்' ஆசிரியர் திருமலைசாமி, 'தமிழர் பெரும் படை' என்னும் பெயரில் இளங் காளை களைக்கூட்டி, அழகிரிசாமியைத் தளபதியாக்கி திருச் சியிலிருந்து கால் நடையாக, வழி நெடுகத் தமிழ் முழக்கம் செய்துகொண்டு சென்னை வந்தடைந் தார். 'கால் நடைகள்', 'சோற்றுப் படைகள்' என் றெல்லாம் எதிர்க்கட்சி ஏடுகள் ஏசிப்பழித்தன. அழ கிரியின் பொறுப்புணர்ச்சியை அன்றுதான் தமி ழர்கள் நன்கு தெரிந்துகொள்ள முடிந்தது. குடந் தையில் அவர் ஆற்றிய சொற்பொழிவு, பார்ப்ப னத் தோழர்களின் நெஞ்சிலும் இரக்கமுண்டு, அவர்கள் தம் கண்களுக்கும் நீர் சிந்தும் இயல் புண்டு என்பதை மெய்ப்பித்தது. மனு மாந்தாதா

வால் தமிழர்களுக்குச் சூழ்ந்த கேட்டினை, அவ்வளவு உருக்கமாக எடுத்துக் காட்டினர். கூடலூரில் 'படை' என்ற சொல்லுக்குள்ள முழுப் பொருளையும் தொண்டர்கள் காட்டவேண்டிய நிலையை எதிர்க்கட்சித் தோழர்கள் உண்டாக்கி விட்டனர். தொண்டர்கள் ஏந்தி இருந்த கொடி, தற்காப்புப் படையாகிவிட்டது. 'தமிழ் வாழ்க' என்னும் முழக்கம், போருக் கழைக்கும் பரணியாக மாறிவிட்டது. கல்மாரிகளுக் கிடையே சொல்மாரி பொழிந்துவந்த அழகிரிக்கு, இரண்டிலொன்று பார்த்து விடலாம் என்ற துணிவு பிறப்பது இயல்புக்கு முரணானதன்று! என்ன செய்தார் அழகிரி? மொழி காக்கப் புறப்பட்ட படையை, வழி நெடுக தமிழின் சிறப்பையும் - தமிழரின் பெருமையையும் தமிழர்க்கு நினைவூட்டக் கிளம்பிய படையை, எதிர்த்தோரை அதம் செய்யும் அழிவுப் படையாக்க முனைந்தாரில்லை. 'தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே செய்கிறார்கள்; அவர்கள் மதிக்கு இரங்குவதன்றி, பகைமை கொள்வது கூடாது' என்று கொதிப்பேறி இருந்த தொண்டர்களுக்கு அறிவூட்டி, அமைதி கண்டார்.

வயிற்றுவலி வந்தடைந்தது. சில நாள் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் அச்சரபாக்கத்தில் அழகிரி படையை நடத்திச் செல்லும் பணியை மேற்கொண்டார். அச்சரபாக்கத்தில் அன்று மாலை கூட்டம். கயப்பாக்கம் பெருநிலக்கிழார் முத்துலிங்கா ரெட்டியாரும் அவர் இளவல் முத்துமல்லாவும் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதோடு, சொந்தப் பணியாகவே படைக்கு ஆவன செய்து வருகிறார்கள். கூட்டத்தில் ஒரு

வீணன், கேள்வித்தாள் என்று அவன் நினைத்துக் கொண்டு, தனது அறிவின்மையின் அத்தாட்சிப் பத்திரத்தை, அதுசமயம் பேசி இருந்த என்னிடம் நீட்டினான். வயிற்று வலியோடு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த அழகிரி, இந்தக் காட்சியைக் கண்டதும், மேடைக்குப் பாய்ந்து வந்தார்; மேஜை மேல் ஏறி நின்றார்; 'படியடா அந்த அறிவாளியின் கேள்விகளை' என்று எனக்குக் கட்டளை பிறப்பித்தார். அவைகளில் வேடிக்கையான கேள்வி ஒன்று-அதற்கு விசித்திரமான பதில் கொடுத்தார். அது, இது.

கேள்வி

'இந்தி மொழியில் உள்ள நூற்களை யார் யார் எந்தெந்த மொழியில் மொழி பெயர்த்து இருக்கிறார்கள் ?'

பதில்

'அந்தந்த மொழிக்காரர்கள் அவரவர்கள் மொழியில் மொழிபெயர்த்துக் கொண்டுள்ளார்கள்!'

தமிழர் பெரும்படை மதுராந்தகம் வந்தடைந்தது. கயப்பாக்கம் K. முத்துலிங்க ரெட்டியார் சத்திரம் படையின் பாசறை. நல்ல விருந்து. படைவீரர்கள், கையில் பிடித்து நெய்க்குடிக்கிறார்கள்: அதற்கு முன்னர் பலநாள் ஆயிற்று ஒழுங்கான உணவு கிடைத்து. இதைக்கண்ட அழகிரி, 'நாளை கிடைக்குமோ கிடைக்காதோ, மேலும் ஒரு கரண்டி நெய் கேட்டுச் சாப்பிடுங்கள்' என்று தொண்டர்களுக்குக்

கட்டளை பிறப்பித்தார். அவ்வளவும் கிண்டல். மறைமுகமாகப் புகழ்ந்தார், உணவளித்தவர்களை.

பல ஊர்களில் தொண்டர்களுக்குத் தலையணை அவர்களுடைய கைகள்தான். அந்தக்குறை நீங்கிற்று கயப்பாக்கம் படையின் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டதும். மதுராந்தகத்தில் ஒவ்வொரு தொண்டருக்கும் தாராளமாகத் தலையணி கிடைத்தது. இதனைப்பார்த்த அழகிரிக்கு எப்படியிருந்ததோ, 'ஆளுக்கு இரண்டுதலையணியாவது போட்டுக் கொள்ளுங்களடா; இனி கிடைக்குமோ கிடைக்காதோ'. என்று விளம்பினார். வயிறு வலிக்கச் சிரித்தோம் அரைமணி நேரம் வரையில்.

படையுடன் வந்த பெருந்தாய் மூவலூர் A. இராமாமிர்தத் தம்மாள். தம் அனுமதி இல்லாமல், தொண்டர்கள் தின்பதில் கொஞ்சம் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதற்காகத் தொண்டர்களைக் கடிந்து கொண்டார்கள். கண்டிருந்த அழகிரி, அம்மையாரின் கண்கள் கண்ணீராகும் அளவிற்கும் கண்டித்து விட்டார். தொண்டர்களின் வீரத்தலைவரல்லவா அவர்?

ஆத்திரத்தை மூட்டும்—ஆவேசத்தைக் கிளப்பும்—இரக்கத்தைக் கொடுக்கும்—அறிவொளி வழங்கும்—ஆராய்ச்சியைத் தூண்டும்—ஆச்சரியத்தைத் தோற்றுவிக்கும்—அழுகையை உண்டாக்கும்—இவ்வளவு உணர்ச்சி மாற்றங்களையும், கேட்போர் அனைவரிடத்தும் உண்டாக்கிவிடும் ஆற்றல் அழகிரியின் சொற்பொழிவிற்கு உண்டு. கேட்டவர் பலன்பெற—இருள் நீங்கி ஒளிவீசி வாழ—வாழ்விற்கு அறிவின் துணைநாட—அழகிரி பேசி

வந்தாரே ஒழிய, "ஆ! ஆ!! என்ன பேசுகிறார்! எத்தனை மணிநேரம் பேசுகிறார்!! மடமட வென்று பேசுகிறார்!!!' என்று, பிறர் சூடும் புகழ்மாலையை மட்டும் கருதியல்ல. கூட்டத்தில் உட்கார்ந்திருப்போர்பெரும்பாலோரின் முகக்குறியைக் கவனித்து, தான் பேசுவதை அவர்கள் எந்த அளவிற்குப் புரிந்து கொள்ளுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு, பேச்சை நீட்டவும், குறைக்கவும், மாற்றவும் அழகிரி செய்வது வழக்கம். பேச்சொலியிலும் மாத்திரை வித்தியாசங்கள் உண்டு. அதற்கேற்ற சொற்களையும் அமைத்துப் பேசுவார். அவர் சொற்பொழிவு இசைக்கருவி இல்லாத இராகமாலிகை. நமது பாமர மக்கள் மனவளத்தை நன்கு தெரிந்து, அவர்கள் திருத்தம் பெறும் முறையில், தான் கூறுவதை அவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், சொற்பொழிவு ஆற்றும் தகுதி பெற்றிருந்தவர்களில் தலைசிறந்தவர் பெரியார்; அவருக்கு அடுத்தவர் அழகிரி. பெரியார் பிரசங்கத்தில் காண முடியாத ஒன்று, அழகிரி சொற்பொழிவில் அடங்கி இருக்கும். அதுதான் நகைச்சுவை. அழகிரியின் பேச்சு, ஒருவரே ஆடும் நாடகம் என்று சொல்வது மிகைபடக் கூறினதாகாது.

காலஞ்சென்ற பன்னீர்செல்வந்தான், அழகிரியின் வளர்ப்புத்தந்தை என்று கூறின் மிகையாகாது. தனது நெருங்கிய நண்பர்களிடம் செல்வத்தைப் பற்றிப் பேசுகின்ற பொழுதெல்லாம், அழகிரியின் தொண்டையைத் தாண்டி வார்த்தைகள் வெளிவர முடியாமல் செய்துவிடும் துக்கம். 'தொண்டர்களின் துன்பம் தெரிந்து நடப்பவர் வறுமையின் வன்மை உணர்ந்தவர்' என்றெல்லாம்

செல்வத்தைக் குறித்துப் பேசாமல் இரார், வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் அவர் இங்கிலாந்து சென்ற பொழுது, நடைபெற்ற திருவாரூர் பிரிவுபசாரக் கூட்டத்தில் பலர் பலவாறு செல்வத்தை வாழ்த்திப் பேசினர்கள். ஆனல் அழகிரி வரவிருக்கும் துக்கச் செய்தியை முன்கூட்டி அறிந்தவர் போலவே பேசினர். அதாவது,

'ஆகாயத்தில் எதிரி விமானங்கள் வட்டமிடும். கீழிருந்து விமானத்தை நோக்கிச் சுடப்படலாம். இது யுத்த காலம். விமானத்தில் செல்வதும் திரும்பி வருவதும் ஆபத்துக்கிடையே நிகழக் கூடியதாகும். திரும்பி நம்மிடம் வந்தால் தான் நமது செல்வம். இல்லையானல், அதுவரை பன்னீர்செல்வம், நாம் இழந்த செல்வந்தான்!'

நமது புரட்சிக் கவிஞரின் கவிதைகளில் அழகிரிக்கு அதிக பற்றுண்டு. 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெரிய நூலை முதல் முதல் கண்டதும், அதனை, அழகிரி படித்து அனுபவித்த போக்கு, ஒரு பெரும் பொதுக் கூட்டம்போல் மக்களைக் கூடச் செய்து விட்டது பட்டுக்கோட்டையில். அவசியமற்ற வார்த்தைகள் இடம் பெருமல், சிக்கனமாகச் சொற்களைக் கையாண்டு, படிப்போர் இருதயத்தைத் தொடும் கவிதைகள் புரட்சிக் கவிஞருடையது என்றும், அதற்கு எடுத்துக் காட்டாக சிலவற்றைப் படித்துக்காட்டியும் பரவசப்படும் அழகிரியையும், அந்தக் காட்சியையும், இனி மனக் கண் கொண்டு தான் பார்க்கமுடியும்.

அழகிரி ஒரு கலா ரசிகர். இசைப்பயிற்சி உடையவர். தெலுங்கு பத்தியங்களைப் படித்து,

அவர் பொருள் சொல்வதைக் கேட்டால் எவரும் ஆச்சரியப்படுவார்கள். முதல் முதலாக தமிழ் நாட்டிடில் மதுரையில் நடிகர் கழகம் கண்டவர் அழகிரி என்பது பலருக்குத் தெரியாது.

தெருக்கூத்து பார்ப்பதில் அவருக்கு அலாதியான பிரியம் உண்டு. ஒரு முறை சித்தையன் கோட்டையில் தோழர் மணி அவர்கள் ஒரு விருந்து வைத்திருந்தார். அந்த விருந்துக்குத் தோழர்கள் W. P. A. சவுந்தரபாண்டியன், P. T. இராஜன், T. N. இராமன் முதலியவர்கள் சென்றிருந்தார்கள். விருந்து முடிந்ததும், அந்த ஊரில் அன்று இரவு நடைபெற்ற தெருக்கூத்தைக் காணச் சென்றுவிட்டார். தடுத்தவர்களுக்கு, 'அதில் உள்ள கலையை நீங்கள் அறிய மாட்டீர்கள்!' என்று தயங்காமல் பதில் கூறிவிட்டு, இரவெல்லாம் கண் விழித்துக் கூத்தைப் பார்த்துவிட்டு, இருமலால் சில நாள் தொல்லைப் பட்டார்.

'மும்மலங்களையும் மறந்தோரும் மறுப்பரோ மக்கள் தம் காதல்' என்று ஒரு புலவன் பாடியுள்ளான். ஆனால் அழகிரி விஷயத்தில் அதுவும் பொய்யாகி விடுகிறது. இல்லாமையால் அதிகமாகத் தாக்கப்பட்டு, குடும்பச் சுமையைத் தாங்கமுடியாமல் உள்ளம் குன்றிப்போய், நோயின் கொடுமையால் உடல் நலிந்துபோய், வேறுவழி இல்லாததால் வேதனையைத் தாங்கிக்கொண்டு மதுரையில் காலத்தைக் கடத்திவரும் பொழுது, ஒரு நாள் எந்தவகையிலோ ஒரு நூறு ரூபாய் கிடைத்தது. தன்னுடைய மகன் எதற்கோ காசு கேட்டான். 'ஜோபியில் இருக்கிறது எடுத்துக்கொள்' என்று சொன்னார்.

சில்லரைக் காசுகளோடு நூறு ரூபாயும் இருப்பதைப் பையன் கண்டான். கருத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. பணத்தோடு பையன் மறைந்தான். பணம் போனாலும் போகிறது மகன் வீடு வந்தால் போதும் என்பது தாயின் கவலை. ஆனால் தந்தையாகிய அழகிரிக்கு இரண்டு கவலையும் இல்லை. பையன் வந்து சேருகிறபடி சேரட்டும் என்று இருந்துவிட்டார். நிரம்ப நெஞ்சுறுதி!

நெடும்பலம் சாமியப்ப முதலியாராயினும், சவுந்திரபாண்டியனாயினும், குமார ராஜாவாயினும், அழகிரியின் அழைப்பில், அவர்கள் 'மிஸ்டர்' என்று பெயரோடு முன் சேர்த்து, வாலை வெட்ட நறுக்கிவிட்டு இருப்பதைத் தான் கேட்கலாம்.

அழகிரியின் உழைப்பின் பெரும் பகுதியை விழுங்கி இருப்பது சேலம் தான். இன்று சேலத்தில் நமக்குப் பெருமிதமான ஆதரவு இருப்பதற்குக் காரணம் அழகிரியின் அந்தக் காலத்து உழைப்பு தான் என்பது மறுக்கமுடியாது உண்மையாகும். அதனை அழியவிடாமல் பாதுகாத்து வருபவர் தோழர் சித்தையன் என்பது பொருந்தாக் கூற்றல்ல.

உலகப் பெரும் போர் மூண்டகாலை, அழகிரி இயக்கப் பணிபுரிவதில் இருந்து ஒதுங்கி இருந்தார். கருத்து வேற்றுமையால் அல்ல; உடல் நலம் குன்றிக்கிடந்த காரணத்தால். நோய் கொஞ்சம் குறைந்ததும், பெரியாரின் அனுமதியுடன், போர்ப் பிரசாரப்பணியில் புகுந்தார். நல்ல வருவாய்தான்; ஆனால் நாலுகாசும் மிச்சம் இருப்பதில்லை. மீண்டும் அழகிரியின் பழைய பேச்சைக் கேட்க முடியாமல்

போனதற்கு, இந்தப்பணியே அடிப்படையாகும். அந்தக்காலத்து உழைப்பு அவருடைய அரிய ஆயுட் காலத்தைக் குறைத்துவிட்டது என்று கூடச் சொல்லலாம்.

இறுதியாக இயக்கப் பிரசாரத்திற்குப் பிற இடங்களுக்குச் செல்வதை அறவே நிறுத்திவிட்டு, உழவுத்தொழிலை மேற் கொள்ளலானர். பரம் பரை பரம்பரையாகப் பயிர் செய்வதையே தொழி லாகக் கொண்டவர்கள் கூட அழுக்காறு கொள் ளும் அளவிற்கு, உழவில் உருவான பலன் கண்டு வந்தார். மீண்டும் இரண்டாண்டு முன்னர் தான், முன்னுள் வாசனை போகாமல், பெரியார் பெரும் படையில் அதிகமாகக் கலந்து கொள்ள ஆரம்பித் தார். அந்தக் காலத்தில் அழகிரியின் பேச் சைக் கேட்டவர்கள், அந்தியக் காலத்தில் அவர் பேச்சைக் கேட்டபொழுது, உண்மையிலேயே என் போல் மனம் நொந்துதான் இருப்பார்கள். நான் முந்தி நான் முந்தி என்று வாய்ச்சிறையிலிருந்து விடுதலைஅடையப் போரிடும்சொற்கள், அழகிரியின் உள் நாவிலேயே தேங்கிக்கிடக்கும் தன்மையைப் பெற்றுவிட்டன. புதுப்புதுக் கருத்துகள் முன்னுள் அழகிரியின் மூளையிலிருந்து உதிர்ந்ததுபோல் உதிர்ந்து, கேட்போரிடம் சென்றடைய மறுத்து விட்டன. காலத்தின் கோளாறு என்று தான் சொல்லவேண்டும்.

பழுத்த இலைகள் மரத்துடன் சேர்ந்திருப்ப தில்லை. புதிய துளிர்கள் துளிர்க்க இடம் கொடுத்து விட்டு, பிறந்த இடத்தைவிட்டுப் பிரிகின்றன பழுத்த இலைகள். பழுத்த இலைகள் உதிரவில்லை

யாஞல் புதிய இலைகள் தோன்றுவது எங்கே? இது இயற்கை விதி. இதனை ஒட்டியதுதான் அழகிரியின் பேச்சுகள். முதல் நாள் பேசினதை மறுநாள் கூட்டத்தில் கேட்க முடியாது. முழுதும் புத்தம் புதிய கற்பனைகளாக இருக்கும். அவ்வளவு தேர்ந்த சிந்தனையாளர் அழகிரி.

பெரியாரின் சிந்தனையின் ஆழத்தை, சொற் பெருக்கின் திறத்தை, அந்தக் காலத்தில் ஐயமற அறிந்திருந்தவர் அழகிரி ஒருவர்தான் என்பது உறுதியான உண்மையாகும். கொள்கையைப் பொறுத்தவரையில் பெரியார் கிழித்த கோட்டை, மீறி நடந்தறியாதவர்கள்—மீற நினைக்காதவர்கள் இரண்டொருவரில் அழகிரி ஒருவர். அழகிரி சாமி எதற்கும்—எவரிடத்திலும்—அச்சம் கொள் ளாதவர். அச்சம், அவர் தன் வாழ்நாளில் என்றும் அறியாத பண்பு. கூறவேண்டுமாஞல் பெரியாருக்கு, அழகிரி இடத்தில் உள்ளூர அச்சமிருந்தது என்று சொல்லலாம். முகத்துக்கு நேராக, தனக்குச் சரி என்று பட்டதை, ஒளிவு மறைவில்லாமல், தேர்ந் தெடுத்த சொற்களால், கடுமையான முறையில் கண்டித்துக் கூறும் பண்பு அழகிரியின் உடன் பிறந்தது. நேருக்கு நேராகப் பெரியாரிடம் கோபித்துக்கொண்டு கடிந்துரைப்பார். கட்சிக்குப் புதிதாகக் குடிவந்தவர்களிடம், பெரியாரைப்பற்றி, அவதூருகப் பேசும் விஷமத்தை அழகிரி என்றும் செய்ததில்லை. அவ்வாறு குறைபடும், கட்சிக்குப் புதியவர்களை, அவர்கள் வாயடங்கும் வரையில், வெளுத்து வாங்கிவிடுவார்; வெட்கித்தலைகுனியும் படி செய்துவிடுவார்.

திராவிடத் தந்தையை பெரியார் என்று கூப்பிடுவதிலும், அழகிரிக்கு மகிழ்ச்சி தரக்கூடிய சொல் 'தோழன்' என்ற சொல்தான். திருச்சியில் நடைபெற்ற மாகாண சுயமரியாதை மாநாட்டில், இவ்வுள்ளக்கிடக்கையை, பெரியாரை விளிக்கும் பொழுது, 'தோழ்னிலே பெருந்தோழன் என். இராமசாமி' என்று வாய்நிறைய மனங்குளிரக் குறிப்பிட்டார். தான் வேறு, தலைவர் வேறு என்று பிரித்துப் பார்ப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. 'பெருந்தோழன்' அதன் விளைவு. பெரியாரின் சுயமரியாதைப் பள்ளிக்கூடத்தின் சட்டாம்பிள்ளை யல்லவா அழகிரி!

தேசியப் போர்முனை சேவைக்குப் பின்னர், அவருடைய பெயரைப் பல காலம் இயக்கத் தோழர்கள் கேட்காமல் இருந்தனர். புதிதாக வந்த தோழர்கள், அந்தக் காலத்தில் அவர் செய்த சேவையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமலே இருந்தது. 'திராவிட மணி' ஆசிரியர் தோழர் முத்து, மீண்டும் அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். அவரும் முயற்சித்தார், அழகிரிக்கு ஓர் நிதி அளிக்க. அண்ணாவும் இசைந்தார், அந்த நற்காரியத்திற்கு. அது நிறைவேறாததற்கு அழகிரி வருத்தப்படாமல் இருந்திருப்பாரா? இயற்கையான தேவையுடன், பெறுவதற்கு இருக்கும் உரிமையும், எதிர்பார்த்து அடைந்த ஏமாற்றத்தால் ஏற்பட்ட எரிச்சலும், எவருக்கும் ஆத்திரத்தைத்தானே தரும்? அழகிரியும் மனிதர்; எப்படி இந்த விதி அவரைமட்டும் கட்டுப் படுத்தாமல் போகும்?

சைவ உணவை, 'குரங்குணவு' என்று நையாண்டி செய்பவர். 'பிரியாணி' என்ற சொல்

அழகிரியின் காதில் விழுந்தாலே, திருச்சியும், 'கரீம்' கடையும் அவர் கண்ணிலும் கருத்திலும் காட்சி அளிக்கும். அத்துடன் 'லாண்டரி' முத்துவும் இருக்கக் காண்பார் அழகிரி.

மரக்கறி உணவின் உயர்வை நிலைநாட்டுவதில் திருச்சி K. A. P. விஸ்வநாதன் அவர்களுக்கு மட்டற்ற ஆர்வம் உண்டு. மாமிச உணவுதான் உயர்ந்தது என்பது அழகிரியின் வாதம். ஒரு முறை, 'போரிலே ஒரு வீரனுக்கு குண்டடிபட்டது. காயம் பலமானதாக இருந்தும், அவன் இறக்கவில்லை. காரணம் அவன் மரக்கறி உணவை உட்கொள்பவனாக இருந்ததால்தான் என்று மருத்துவர்கள் கூறினார்கள்' என்று கூறி, தம்வாதத்தை மெய்ப்பிக்க முயன்றார் கே. ஏ. பி.

அழகிரி, அடுத்த நிமிஷமே, 'வீரனின் இருயத்திலோ அதுபோன்ற வேறு இடத்திலோ குண்டு பாய்ந்திருந்தால் தெரிந்திருக்கும் சைவ உணவின் யோக்யதை என்றுபதில்கூறினார். அமைதி நிலவியது.

புதுவைக்கு வருவதென்றாலே அழகிரிக்கு தனிப்பிரியம். விளக்கம் தேவை இல்லை. முதல்முதலாக அன்று அரியாங்குப்பம் மேயராக இருந்த வழக்கறிஞர் பெருமாள் அழைப்பிற்கிணங்க அழகிரி புதுவை வந்தார். அந்தஊரில் அவர் பேசின முதல் கூட்டம் அதுதான்.

அழகிரிக்கு, பெரியார் பொருள் உதவி செய்த பொழுதெல்லாம் வேதனையோடுதான் செய்திருப்பார். அழகிரியைப் பீடித்திருந்த தூர்ப்பழக்கந்தான், பெரியார் வேதனைக்குக் காரணம். அழகிரி

மறைந்த பின்னர், அவர் குடும்பம் உள்ள நிலையில், பெரியார் வேண்டிய அளவு உதவி செய்ய முந்துவாரானால் நாம் ஆச்சரியப்படத் தேவை இல்லை.

அழகிரியை நினைக்கும்பொழுது அக்காலத்தில் பொது வாழ்வில் புகுந்து, அல்லல் பல ஏற்று, தொல்லை பல பட்டு, மண்ணில் மறைந்தவர்களையும், அதனை எதிர்நோக்கி இருப்பவர்களையும் குறிப்பிட வேண்டியது முக்கியமாகும். மறைந்த மாயவரம் நடராஜன், நாகை மணி, இரயிலடி சின்னையா முதலியவர்களையும், இன்று உயிர் வாழும் தோழர்கள் S. V. லிங்கம், நாகை காளியப்பன், சித்தக்காடு இராமையா முதலியவர்களையும் பெயரளவிற்காவது இயக்கத் தோழர்கள் அறிந்திருப்பது முக்கியம்.

சிறை செல்வதை, அவர் கண்டிப்பார். அதனை சோம்பேறிகள் செயல் என்றும் கூடச்சித்தரித்துப் பேசுவார். தியாகம் செய்யப் பயந்து, அழகிரி அவ்வாறு கண்டிக்கவில்லை. சிறையில் அடைபட்டு இருக்கும் வேளையில் வெளியில் இருந்தால் எவ்வளவோ பேர்களை இயக்கத்திற்குத் திருப்பலாமே என்ற நோக்கம் கொண்டிருந்தவர். ஆனால், அவர் விருப்பத்திற்கு மாறாக, பல காலமாகக் கொண்டிருந்த கோட்பாட்டிற்கு எதிராக, சென்னை அரசாங்கம், அழகிரியை, இறுதிக் காலத்தில் ஆறு நாள் சிறையில் அடைத்து வைத்திருந்தது. முக மலர்ச்சியோடுதான் சிறையில் இருந்தார் என்று உள் சென்றவர்கள் உரைக்கக் கேட்டேன்.

அவர் கேளாமலே, நிலை தெரிந்து அவ்வப்பொழுது உதவி செய்து வந்த நடிகவேள் M. R.

இராதா அவர்களை குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை. நோயின் கடுமையான தாக்குதலைத் தணித்துக் கொள்வதற்கு, நடிகவேளின் பொருள் உதவி பெரும் பங்கு துணை செய்தது. சுயமரியாதை இயக்கத் தோழர்கள் முன்னாள் தளபதியை மறந்துவிடவில்லை என்பதற்கு அறிகுறியாக, அண்ணாவின் தூண்டுதலால் சென்னைச் சுயமரியாதை சங்கத்தார் கைவச மிருந்த தொகை முழுவதையும் கொடுத்து மகிழ்ந்தனர். அண்ணாவும், நிபந்தனை விதித்து, கூட்டத்திற்கு நூறு ரூபாய் வீதம், அழகிரிக்குப் பொருள் தேடிக் கொடுத்தது போற்றுதற் குரியதாகும். தோழர் நெடுஞ்செழியனும், தமக்குரிய பங்கை நன்கு செய்து முடித்தார்.

அழகிரி—அஞ்சாநெஞ்சர், ஆண்மையாளர், அறிவாளி, அருமையான பேச்சாளி-எல்லாம் சரி-ஆனால்—அவர் ஒரு (Pleasure Seeker) இன்பம் தேடி, அதுவும் அளவு கடந்து. எதற்கும் ஒருவரையறை, முறை உண்டு. இது, அறவே அவர் அறியாதது. இன்பந் தேடிச்சென்று, இன்னல் பல ஏற்று, இறுதியை விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். பகுத்தறிவு வாதி, அதனை விரட்டி விரட்டி அடித்தார், இந்த ஒரே ஒரு விஷயத்தில். பழக்கம், பகுத்தறிவை வென்றுவிட்டது. இதுதான், அவர் முடிவு நமக்கு போதிக்கும் படிப்பினை.

28-3-49 மாலை தஞ்சையில் உயிர் நீத்தார் அழகிரி. அகவை ஐம்பத்திரண்டு. இயக்கப் பணி செய்ய, இனி அழகிரியால் முடியாதெனினும், நோய் குறைந்து, பெற்றெடுத்த தாய்க்குச் செல்வ மகனாய், மனைவிக்கு மனம் மாறா கணவராய், தம்

மக்களுக்கு நற்புத்தி கூறும் நல்லாசிரியராய், நமக்கெல்லாம் ஊக்கமளிக்கும் உறுதுணைவராய், உயிரோடு இருப்பார் என்று என்போல் எவ்வளவோ பேர் நம்பி இருந்தனர். அது நிறைவேறவில்லை. அஞ்சா நெஞ்சன் அழகிரி மறைந்தார். அருந்திறல் வீரன் நம்முள் கலந்துவிட்டார்.

அவர் ஆவிநீத்த உடல் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. ஐம்பதாயிரம் மக்களுக்குமேல், நீர்சிந்தும் கண்களுடன், சொற் கொண்டலுக்கு முன் வாய்திறக்க அஞ்சி மௌனமாக, தளர்ந்த நடையினராய், தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். ஐந்தாறு பேர்களால் ஆரம்பிக்கப் பட்ட கட்சி, அதனை உருவாக்க உழைத்து உழைத்து உயிர் துறந்துவிட்ட உத்தமரின் சவ அடக்கத்தில் ஐம்பதினாயிரம் மக்கள் கலந்து கொள்வதை, அழகிரியின் வெறும் உடல் மறுபடியும் உயிர்பெற்றுக் காண நேர்ந்திருந்தால், எத்தகைய மகிழ்ச்சியை இறந்தவர் பெற்றிருப்பார்? மகிழ்ச்சியோடு மட்டுமா சம்பவம் முடிந்திருக்கும்? கண்கள் கலங்கிய குட்டையாகி அழச் சக்தி இழந்து உள்ளம் துடித்து நிற்கும் மனைவி, பெற்றதாய், ஓவென்று கதறும் மக்கள், அவர்களுக்காகக் காத்து இருக்கும் பயங்கரமான எதிர்காலம், தனது முற்றும் முடிந்த இயலாமை, இவ்வளவுமன்றோ அழகிரியின் எண்ணத்தில் இடம் பெற்றிருக்கும்? மீண்டும் ஒரு முறை அன்றோ பிணமாகி இருப்பார் அந்தப் பெரும்வீரர்!

முன் பணம் அனுப்பாமல் 'கூட்டத்திற்கு வாருங்கள்' என்று மட்டும் உருக்கமாக அழைப்பு

அனுப்பும் தோழர்களை, பின்பொரு முறை பார்க்க நேர்ந்தால், அழகிரி கூறுவார், 'அழைப்பைக் கொண்டுபோய்க் காண்பித்தேன், புகை வண்டியில் ஏற்ற மறுத்துவிட்டார்கள்!' என்று. அதுபோல் பிணம் பேசுமானால், கண்டிப்பாக அழகிரியின் பூத உடல் கேட்டிருக்கும், கடைசி கடமையைச் செய்த தோழர்களைப் பார்த்து,

"என்னரும் தோழர்காள்! உங்கள் அன்புக்கு என் நன்றி; வணக்கம். இதுமட்டும் போதாதப்பா; இதனால் என் மனம் குளிராதப்பா. என்னைப் பிரிந்து பரிதவிக்கும் என் தாயின் நிலையைப் பாருங்கள்! என்னை இழந்ததால் இடிந்து போயிருந்தாலும் எதிர்காலத்தை எண்ணி எண்ணி ஏங்கிய முகத்துடன் இருக்கும் என் இல்லக் கிழத்தியைப் பாருங்கள்! என்னரும் கண்மணிகளைப் பாருங்கள்! அவர்கள் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதைக் கொஞ்சம் கற்பனை செய்து கொள்ளுங்கள்! பின்னர்க் கூறுங்கள், உங்களின் எந்தச் செயல் எனக்கு ஆறுதல் அளிக்கும் என்பதை.

"செயலற்று நிற்காதீர்கள்! மயானத்தோடு என்னை மறந்து விடாதீர்கள்! மனம் திறக்கட்டும்! என் குடும்பத்திற்கு வாழ்வளியுங்கள்! கேட்பது பிச்சை யல்ல; உரிமை! என் கடமை தீர்ந்தது; உங்கள் கடமை பூர்த்தி யாகட்டும்!"

இதுதான் இயக்கத் தோழர்களுக்கு அழகிரியின் சவம் வெளியிடும் இறுதி வேண்டுகோளாக இருந்திருக்கும்.

113623

மு. கருணாநிதி

எழுதியது

சங்கிலிச் சாமி

விலை அணு 8.

●

S. குருசாமி

விடுதலை ஆசிரியர்

எழுதியது

திருப்பதி மொட்டை

விலை அணு 6.

அறிவுப் பண்ணையில் கிடைக்கும்